www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSS

# இரண்டாம் பருவ தொகுத்தறி தேர்வு - 2024

6 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 2.00 மணி மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 X 1 = 5

1. ஆரியர்கள் முதலில் ................. பகுதியில் குடியமர்ந்தனர்
   அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு
2. சமணத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருந்தனர்?
   அ) 23 ஆ) 24 இ) 25 ஈ) 26
3. .......... பிறந்த நாளைச் சர்வேத அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்.
   அ) மகாத்மா காந்தி ஆ) சுபாஷ் சந்திரபோஸ்
   இ) சர்தார் வல்லபாய் பட்டேல் ஈ) ஜவஹர்லால் நேரு
4. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ............ .
   அ) 14 ஆ) 18 இ) 16 ஈ) 21
5. வேளாண்மை என்பது .......... நிலைத் தொழிலாகும்.
   அ) முதன்மை நிலை ஆ) இரண்டாம் நிலை
   இ) மூன்றாம் நிலை ஈ) நான்காம் நிலை

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 x 1 = 5

6. .......... முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும்.
7. ............ பிந்துசாரரின் மகனாவார்.
8. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் .......... எனப்படுகிறது.
9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் ............ .
10. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் ............... .

**III பொருத்துக.** 5 x 1 = 5

| | | |
|---|---|---|
| 11. மகாவீரர் | - | ஜனவரி - 26 |
| 12. சாணக்கியர் | - | வேளாண் சார்ந்த தொழிற்சாலை |
| 13. உலகளாவிய வளம் | - | வர்த்தமானர் |
| 14. குடியரசுத்தினம் | - | அர்த்தசாஸ்திரம் |
| 15. பருத்தியாலை | - | காற்று |

**IV சரியா? தவறா? .** 5 x 1 = 5

16. படைத்தளபதி "கிராமணி" என அழைக்கப்பட்டார்.
17. புத்தர் கர்மாவை நம்பினார்.
18. அசோகர் கலிங்கப்போரில் தோல்வியடைந்த பின்னர் போரைக் கைவிட்டார்.
19. தேசியக் கொடியின் நீள அகலம் 3 : 2 என்ற விகிதத்தில் உள்ளது.
20. பால் பண்ணை ஒரு கூட்டுறவுத் துறை ஆகும்.

**V கூற்றோடு காரணத்தைப் பொருத்துக. / பொருத்தமான விடையை தேர்ந்தெடு.** 4 x 1 = 4

21. வேதகால சமூகம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது.
    அ) ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்.
    ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.
    இ) தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்.
    ஈ) உடன்கட்டை ஏறுதல் தெரியாது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

22. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது.
அ) கிராமா < குலா < விஷ் < ராஷ்டிரம் < ஜனா
ஆ) குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரம்
இ) ராஸ்டிரம் < ஜனா < கிராமா < குலா < விஷ்
ஈ) ஜனா < கிராமா < குலா < விஷ் < ராஷ்டிரம்

23. வாக்கியம் : வளங்களைப் பாதுகாக்காவிடில் மனித இனம் அழிந்து விடும்.
புரிதல் - 1 : வளங்களைப் பாதுகாக்க வேண்டாம்.
புரிதல் - 2 : வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.
சரியான விடையைத் தேர்ந்தெடு.
அ) புரிதல் 1 மட்டும் சரி ஆ) புரிதல் 2 மட்டும் சரி
இ) புரிதல் 1 மற்றும் 2 தவறு ஈ) புரிதல் 1 மற்றும் 2 சரி

24. பொருந்தியுள்ளவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.
1. ரவீந்திரநாத் தாகூர் - அ) தேசியப்பாடல்
2. பங்கிம் சந்திர சட்டர்ஜி - ஆ) தேசியக் கொடி
3. பிங்காலி வெங்கையா - இ) வான் இயற்பியலாளர்
4. மேக்னாத் சாகா - ஈ) தேசியகீதம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | அ | ஈ | ஆ | இ |
| ஆ) | ஈ | அ | இ | ஆ |
| இ) | ஈ | அ | ஆ | இ |
| ஈ) | ஆ | அ | இ | ஈ |

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

**VI எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி.** 8 x 2 = 16

25. நான்கு வேதங்களின் பெயர்களை குறிப்பிடுக.
26. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?
27. 'ஜினா' என்பதின் பொருள் என்ன?
28. அசோகரின் இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைப் பேராணைகளிலிருந்து நீங்கள் அறிவதென்ன?
29. உயிரற்ற வளங்களை வரையறு.
30. வளப்பாதுகாப்பைப் பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன?
31. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
32. இயற்கை தேசிய சின்னங்கள் எவை?
33. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
34. பண்டமாற்று முறை என்றால் என்ன?
35. இரண்டாம்நிலைத் தொழில்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?

**VII விரிவான விடையளி.** 3 x 5 = 15

36. சமணத்தின் முக்கியமான ஐந்து நடத்தை விதிகள் எவை? *(அல்லது)*
மகதத்தின் எழுச்சிக்கான காரணங்களில் ஏதாவது மூன்றினை எழுதுக.
37. முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைச் செயல்பாடுகளை விவரி. (அல்லது)
உனது மாவட்டத்தில் நடைபெறும் முக்கிய முதல்நிலைத் தொழில்களை பட்டியலிடுக.
38. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும். *(அல்லது)*
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களின் மூலம் நீ புரிந்து கொள்வது என்ன?

**VIII கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.** 5 x 1 = 5

39. 1) சாரநாத் 2) கலிங்கம் 3) சாஞ்சி 4) மகதம் 5) வங்காள விரிகுடா



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com